தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது

# தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

கனி பிரிண்டிங்

TDP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

நாளிதழ் மற்றிதழ் பேக்கிங் குறைந்த விலையில் பிரிண்டிங் செய்து தரப்படும்

தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 | இதழ்:246 | 4 பக்கங்கள் | 04:04:2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருடசந்தா ரூ.1825



**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.**

**விளக்கம்:**

ஈதல் பண்புடையவர்க்குத் தம்மை நாடி வரும் இரவலரின் புன்னகை பூத்த முகத்தைக் கண்டு இன்புறும் வரையில், அவருக்காக இரக்கப்படுவதும் ஒரு துன்பமாகவே தோன்றும்.

## மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4 லட்சம் மத்திய ஆயுதப்படை போலீஸார்



புதுடெல்லி: மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4 லட்சம் மத்திய ஆயுதப்படை போலீஸார்(சிஏபிஎஃப்) அனுப்பப்பட உள்ளனர்.மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கான பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் மேற்கு வங்க மாநில தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 2.4 லட்சம் சிஏபிஎஃப் போலீஸார் அனுப்பப்பட உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இவர்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.மேற்கு வங்க மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான மத்திய ஆயுதப்படை போலீஸார் பாதுகாப்புப் பணிகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து தேர்தல் ஆணைய மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, “மேற்கு வங்கத்தில் வரும் 29-ம் தேதி 2-ம் கட்டத் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையத்துக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்படும். வாக்கு எண்ணும் மையங்களுக்கு வெளியே சுமார் 200 கம்பெனி சிஏபிஎஃப் படையினர்பாதுகாப்புப்பணியில்ஈடுபடுவர்.அதுமட்டுமல்லாமல் சுமார் 500 கம்பெனி சிஏபிஎஃப் கம்பெனி படையினர், மாநிலம் முழுவதும் சட்டம்-ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவர். அண்மையில் மால்டா மாவட்டத்தில் நீதித்துறை அதிகாரிகளை முற்றுகையிட்டு சில கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அதுபோன்ற பிரச்சினைகள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க பாதுகாப்புப் பணிகளை ஆயுதப் படை போலீஸார் மேற்கொள்வர். மாநிலம் முழுவதும் சுமார் 2.4 லட்சம் மத்திய ஆயுதப் படை போலீஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் இருப்பர். இதுதவிர மேற்கு வங்க மாநில போலீஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவர்” என்றார்.

## நாடாளுமன்றத்தில் பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குற்றமா? - ஆம் ஆத்மி கட்சிக்கு ராகவ் சத்தா கண்டனம்




புது டெல்லி: மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சியின் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அக்கட்சியை நேரடியாகத் தாக்கிப் பேசிய ஆம் ஆத்மி எம்.பி ராகவ் சத்தா, “எனது மவுனத்தை தோல்வியாகக் கருதக்கூடாது. நாடாளுமன்றத்தில் பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குற்றமா?” என்று கேள்வி எழுப்பினார்.ஆம் ஆத்மியின் மாநிலங்களவைத் துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்டார். அவருக்கு பதிலாக புதிய துணைத் தலைவராக அசோக் மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பாக ஆம் ஆத்மி சார்பில் மாநிலங்களவை செயலாளரிடம் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து எக்ஸ் தளத்தில் ராகவ் சத்தா வெளியிட்ட வீடியோ பதிவில், “நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், நான் பொதுப் பிரச்சினைகளை எழுப்புகிறேன். ஒருவேளை, நாடாளுமன்றத்தில் வழக்கமாக எழுப்பப்படாத தலைப்புகளையும் நான் எழுப்பக்கூடும். ஆனால், பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குற்றமா? நான் ஏதேனும் குற்றம் செய்துவிட்டேனா? நான் ஏதேனும் தவறு செய்துவிட்டேனா?.ராகவ் சத்தாவை நாடாளுமன்றத்தில் பேசவிடாமல் தடுக்க வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை செயலகத்திடம் தெரிவித்துள்ளது. ஆம், ராகவ் சத்தாவுக்கு நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்பு அளிக்கக்கூடாது என்று ஆம் ஆத்மி கட்சி நாடாளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளது. இன்று நாடாளுமன்றத்தில் பேசுவதற்கான எனது உரிமையைப் பறித்தவர்கள், என்னை மவுனமாக்கிவிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எனது மவுனத்தை எனது தோல்வியாகக் கருதாதீர்கள். நேரம் வரும்போது வெள்ளப்பெருக்காக மாறும் நதி நான். ஜொமாட்டோ மற்றும் பிளிங்கிட் விநியோக ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நான் பேசுகிறேன். உணவில் நடைபெறும் கலப்படம் குறித்த பிரச்சினையை நான் எழுப்புகிறேன். சுங்கச்சாவடிகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் வாயிலாக நடைபெறும் கொள்ளை குறித்து நான் பேசுகிறேன்.தொலைத்தொடர்பு நிறுவனங்கள் எவ்வாறு 12 மாதங்களில் நம்மை 13 முறை ரீசார்ஜ் செய்ய வைக்கின்றன என்பது குறித்தும் நான் பேசுகிறேன்.


# “மெத்தனம் வேண்டாம்... பிரச்சாரத்தை தீவிரப்படுத்துங்கள்” - நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் உத்தரவு



சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரங்களை மெத்தனமின்றி தீவிரப்படுத்த வேண்டுமென திமுக நிர்வாகிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின், திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து தொடர் பிரச்சாரம் செய்துவருகிறார்.இந்நிலையில் ஸ்டாலின் தலைமையில் தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் காணொலி வாயிலாக நேற்று நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர்கள், வேட்பாளர்கள், பகுதிச் செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.இந்த கூட்டத்தில் தொகுதிகளில் இதுவரை செய்யப்பட்ட பணிகள், அடுத்து மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள், பூத் கமிட்டிகளின் நிலையை ஆய்வு செய்தல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. அப்போது சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் குறைந்த கால அவகாசமே உள்ளது. எனவே, நிர்வாகிகள் மெத்தனமாக இருக்காமல் பிரச்சாரங்களை தீவிரப்படுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், “வெற்றி ஒன்றே இலக்கு, ஓய்வின்றி உழைக்கும் கட்சியின் செயல்வீரர்களுக்குப் பாராட்டுகள். நேற்று இரவு கோவையில் முதற்கட்ட பரப்புரை பயணத்தை முடித்துவிட்டு, சென்னைக்கு திரும்பினேன். இன்று காலை தமிழகம் முழுவதும் களப்பணியாற்றி மக்களின் நம்பிக்கையை வாக்குகளாக உறுதி செய்துவரும், கட்சி நிர்வாகிகளுடன் உரையாடி அவர்களை ஊக்கப்படுத்தினேன்” என்று தெரிவித்துள்ளார். திமுகவில் அமமுக முன்னாள் எம்எல்ஏக்கள்: இதற்கிடையே அமமுக முன்னாள் எம்எல்ஏ-க்களான சி.கோபால், என்.ஜி. பார்த்திபன் ஆகியோர் தங்கள் ஆதரவாளர்களுடன் நேற்று திமுக-வில் இணைந்தனர். இவர்கள் இருவரும் டிடிவி. தினகரனுக்கு மிக நெருக்கமாக இருந்தவர்கள் எனவும், தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்காத அதிருப்தியில் திமுக-வில் இணைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

## புதுச்சேரியில் வாக்கைப் பிரிக்கும் புதிய கட்சிகள்: களத்தில் என்டிஏ, இண்டியா கூட்டணி மும்முரம்





புதுச்சேரி: மத்தியில் நீண்ட காலம் காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததால் புதுச்சேரியிலும் அக்கட்சியே ஆட்சியை பிடித்தது. இந்த நிலை 2011-ம் ஆண்டில் மாறியது. காங்கிரஸில் இருந்து பிரிந்து என்.ஆர். காங்கிரஸை தொடங்கினார் ரங்கசாமி. அது முதல் புதுச்சேரிக்கான சொந்த மண்ணில் உருவான ஒரு கட்சியின் செல்வாக்கு உயர்ந்தது.அப்போது என்.ஆர். காங்கிரஸை தொடங்கிய ரங்கசாமி, அதிமுகவுடன் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று, அதன்பின் தனித்து ஆட்சி அமைத்தார். கட்சி தொடங்கி ஒன்றரை மாதத்தில் அவர் ஆட்சியைப் பிடித்தது பலரின்புருவத்தை உயர்த்தியது. கடந்த 2016 தேர்தலில் கூட்டணி இன்றி தனித்து நின்ற போது ரங்கசாமியால் 8 தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்று, எதிர்க்கட்சி அந்தஸ்தையே பெற முடிந்தது.கடந்த 2021-ல் பாஜக, அதிமுகவுடன் கூட்டணி அமைத்து ரங்கசாமி மீண்டும் ஆட்சியை பிடித்தார். அந்த தேர்தலில் எப்போதும் இல்லாத வகையில் பலரும் பாஜக, என். ஆர்.காங்கிரஸ் கட்சிகளுக்குத் தாவியதால் பெரும் பின்னடைவை காங்கிரஸ் சந்தித்தது. அப்போது காங்கிரஸ் 2 எம்எல்ஏக்களை மட்டுமே பெற்றது. இதிலிருந்து மீள வேண்டும் என்று காங்கிரஸும், ஆட்சியைத் தக்க வைக்க வேண்டும் என்று என்.ஆர். காங்கிரஸும் தற்போதைய தேர்தல் களத்தில் தீவிரமாக மோதுகின்றன. கூடவே தங்களை மென்மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் பாஜக தீவிரம் காட்டி வருகிறது.என்ஆர். காங்கிரஸுடன் அதன் பழைய கூட்டாளிகளான பாஜக, அதிமுக இணைந்துள்ளது. புதிதாக லட்சிய ஜனநாயக கட்சியும் கைகோர்த்துள்ளது. மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் என்.ஆர். காங்கிரஸ் 16, பாஜக 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதிமுக, லஜக முறையே இரு தொகுதிகளில் போட்டியிடுகின்றன. “2029 வரை மத்தியில் பாஜக ஆட்சிதான் நீடிக்கும்.இந்தச் சூழலில் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கூட்டணி ஆட்சியில் இருப்பதே வளர்ச்சிக்கு வழி வகுக்கும்” என்று ரங்கசாமி பிரச்சாரம் செய்து வருகிறார். அதிமுகவும், லட்சிய ஜனநாயக் கட்சியும் தங்கள் தொகுதிகளில் வெற்றி பெற தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அதேநேரத்தில் இண்டியா கூட்டணியில் தொகுதி பங்கீடே பல்வேறு சிக்கல்களுக்கு இடையில் முடிந்து ஒருவித அதிருப்தியுடனே களத்தில் இறங்கியிருக்கின்றனர். மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் 16 தொகுதிகள் காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டது. 13 தொகுதிகளில் திமுக, ஒரு தொகுதியில் விசிக போட்டியிடுகிறது. இக்கூட்டணிக்காக தொடக்கத்தில் உரத்து குரல் கொடுத்து வந்த இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றன. கூட்டணியில் ஒப்பந்தம் செய்து கொண்டபடி பிரதான கட்சிகளான காங்கிரஸ் நடந்து கொள்ளவில்லை. இதனால் காங்கிரஸ் - திமுக இடையே மோதல் ஏற்பட்டு, தங்களுக்கான 16 தொகுதிகளைத் தாண்டி திமுக போட்டியிடும் 5 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டி வேட்பாளர்கள் கை சின்னத்துடன் களத்தில் உள்ளனர். ஒரே தொகுதிக்குள் ஒரு பக்கம் உதய சூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்பதும், மறுபுறம் கை சின்னத்துக்கு வாக்கு கேட்பதும் என்று இண்டியா கூட்டணிக் கட்சியினர் புதுவை மக்களை திகைப்பில் ஆழ்த்தி வருகின்றனர். விசிக போட்டியிடும் ஒரு தொகுதியிலும் காங்கிரஸ் போட்டி வேட்பாளர் வலம் வந்து வாக்கு சேகரிக்கிறார். இண்டியா கூட்டணியின் இந்த சிதறல் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு சாதகமாக அமைந்திருக்கிறது.கடந்த இரு நாட்களுக்கு முன் புதுச்சேரிக்கு வந்த காங்கிரஸ் அகில இந்திய பொதுச் செயலாளர் முகுல் வாஸ்னிக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை மட்டும் சமாதானப்படுத்தி, அவர்கள் கூடுதலாக போட்டியிட்ட 3 தொகுதிகளில் காங்கிரஸுக்கு ஆதரவுதருமாறுகூறியிருக்கிறார். அதன்படி அக்கட்சியினர், தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள உழவர்கரை தொகுதியில் மட்டும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். மற்ற 3 தொகுதிகளில் காங்கிரஸுக்கு எதிரான பிரச்சாரத்தை நிறுத்தி விட்டனர். இதனிடையே புதுவையில் தவெகவும், நாம் தமிழர் கட்சியும் களத்தில் உள்ளன. தமிழக வெற்றிக் கழகம் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் 28 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அவர்களுடன் கூட்டணியில் உள்ள நேயம் மக்கள் கழகம் இரு தொகுதிகளில் போட்டியிடுகிறது. நாம் தமிழர் கட்சி 28 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுகிறது. இவர்களுக்கான தனித்த வாக்குகளும் உள்ளன. தமிழகத்தைப் போல புதுவையிலும் தவெகவுக்கு இளம் வாக்காளர்களின் செல்வாக்கு உள்ளது.யூனியன் பிரதேசமான புதுவையில் 20 ஓட்டு வித்தியாசத்தில் வேட்பாளர்கள் வெற்றி பெற்ற சரித்திர நிகழ்வெல்லாம் அரங்கேறியிருக்கிறது. சிறிய அளவிலான வாக்குகள் வெற்றி தோல்வியை மாற்றி விடும். அந்தச் சூழலில் தவெக, நாதக வாக்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதை கணக்கில் வைத்தே தவெகவில் தற்போதைய எம்எல்ஏக்கள், முன்னாள் எம்எல்ஏக்கள், தொகுதி பிரபலங்கள் சீட் பெற்று போட்டியிடுகின்றனர். அவர்களும் அந்த தொகுதியில் வெற்றி பெற தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.மங்கலம், தட்டாஞ்சாவடி என இரு தொகுதிகளில் போட்டியிடும் முதல்வர் ரங்கசாமி தட்டாஞ்சாவடியில் அதிக கவனம் செலுத்துகிறார். மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கமும் தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிடுகிறார். இவர்கள் இருவரும் பிற தொகுதிகளின் பிரச்சாரத்துக்கு சென்றாலும், தங்கள் தொகுதிகளில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அமைச்சர் நமச்சிவாயம், பாஜக மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம், திமுக மாநில அமைப்பாளர் சிவா ஆகியோரும் தங்கள் தொகுதிகளுக்கே முக்கியத்துவம் தருகின்றனர். மொத்தத்தில் முக்கியத் தலைவர்கள் தங்கள் தொகுதிகளிலேயே முடங்கிப் போயிருக்கின்றனர். இதனால் பிரச்சார களம் சூடுபிடித்துள்ளது.

## கிணற்றில் கவிழ்ந்த கார்.. ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேர் பலி





மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டம் திண்டோரி அருகே நள்ளிரவு தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுவிட்டு திரும்பிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து நீர் நிரம்பிய கிணற்றில் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் 5 குழந்தைகள் உட்பட 9 பேரும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மீட்புக் குழுவினர் கிரேன் உதவியுடன் உடல்களை மீட்டனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு

# வித்தியாசமான முறையில் "விழிப்புணர்வுக் குடை" என்ற தனித்துவமான முயற்சியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

## மதுரை கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



மதுரை, ஏப். 04–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்–2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, 100% வாக்களிப்பை உறுதி செய்யவும், என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்பதை வலியுறுத்தி SVEEP (Systematic Voters' Education and Electoral Participation) திட்டத்தின் கீழ் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்புதுமையான மற்றும் கலாச்சாரத்தை மையமாகக் கொண்ட விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் நடைபெற்றது.

தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் SVEEP ஸ்டிக்கர்கள் அச்சிடப்பட்ட நூற்றுக்கணக்கான வண்ணமயமான குடைகள் கொண்டு "விழிப்புணர்வுக் குடை" என்ற தனித்துவமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்த முயற்சி பொதுமக்களுக்கு வெயிலிலிருந்து பாதுகாப்பு அளிப்பதுடன், தேர்தல் விழிப்புணர்வு தகவல்களை எளிதில் பரப்பும் வகையில் "விழிப்புணர்வு வழித்தடம்" ஒன்றை உருவாக்கியது.

மேலும், என் வாக்கு விற்பனைக்கு அல்ல என்பதை வலியுறுத்தும் வகையில் பிரம்மாண்டமான வட்ட வடிவ ரங்கோலி (கோலம்) வரையப்பட்டது.

"ஜனநாயகத் திருவிழா" என்ற கருத்தை முன்னிறுத்தி, மதுரையின் நாட்டுப்புற பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் ஓயிலாட்டம்நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் பொதுமக்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்ததுடன், ஜனநாயக பங்கேற்பின் அவசியத்தையும் வலியுறுத்தியது. அதனைத் தொடர்ந்து சாலையில் 1 கிலோமீட்டர் நீளத்திற்கு மனிதச் சங்கிலி அமைக்கப்பட்டு, குடிமக்களின் ஒற்றுமை மற்றும் பொறுப்புணர்வு வெளிப்படுத்தப்பட்டது.

இந்த மாபெரும் நிகழ்வு, வாக்களிப்பின் அவசியத்தை உணர்த்தும் வலுவான விழிப்புணர்வு நடவடிக்கையாகஅமைந்தது. தொடர்ந்து பொது மக்கள் மற்றம் அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மதுரையின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தையும் புதுமையான பொதுவிழிப்புணர்வு முறைகளையும் ஒருங்கிணைத்து, இந்நிகழ்ச்சிகள்நடைபெற்றது. வரவிருக்கும் தேர்தலில் அனைத்து தகுதியுடைய வாக்காளர்களும் தங்கள் வாக்குரிமையைபொறுப்புடன் பயன்படுத்துமாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர்(ஊரகவளர்ச்சி முகமை) வானதி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விசாலாட்சி, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) பொன்ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், அறிவுறுத்தலின்படி, விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம் நெற்குணம் ஊராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விதமாக சுமார் 1000க்கும் மேற்பட்ட நெல் தட்டு நாற்றுகளை பயன்படுத்தி இரண்டு ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாய நிலத்தில் 60க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகளை கொண்டு (02.04.2026) அன்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன், இணை இயக்குநர்/திட்டஇயக்குநர்(மகளிர்திட்டம்)செந்தில்வடிவு, வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர் (திட்டங்கள்) சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சரவணன், வேளாண்மை உதவி இயக்குநர் பாலு மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நீடாமங்கலம் அரசு உதவிபெறும் இலக்குமி விலாச நடுநிலைப்பள்ளி 107வது ஆண்டு விழா



நீடாமங்கலம், ஏப். 04–

நீடாமங்கலம் அரசு உதவி பெறும் இலக்குமி விலாச நடுநிலைப் பள்ளியின் 107வது ஆண்டு விழா வட்டார கல்வி அலுவலர் இன்பவேணி தலைமையிலும் வட்டார வள மைய மேற்பார்வையாளர் சத்யா பள்ளி முகவர் பழனிவேலு, தமிழ்நாடு அறிவியல் இயக்க ஒன்றிய தலைவர் ராஜலெட்சுமி முன்னிலையிலும் நடைபெற்றது.

பள்ளியின் இணை செயலாளர் ஜெகதீஷ் பாபு அனைவரையும் வரவேற்றார். தலைமை ஆசிரியர் தேவிலட்சுமி 107 ஆண்டு பழமை வரலாறு நிறைந்த பள்ளியின் ஆண்டறிக்கையை வாசித்தார்.

விழாவில் இப்பள்ளி அறிவியல் இயக்கத்தின் சார்பில் மாவட்ட அளவில் வினாடி வினா போட்டிகளில் மாணவர்கள் திறம்பட செயல்பட்டதையும், மாநில அளவில் இந்த ஆண்டு குழந்தைகள் விஞ்ஞானி விருது பெற்றதையும் , பள்ளி மாணவர்கள் அறிவியல் செயல்பாடுகளில் சிறப்பான பங்களிப்பை ஆசிரியர்கள் செய்து வருகின்றனர் என்றும், மாநில எழுத்தறிவு விருது பெறகாரணமாக இருந்த பள்ளியின் ஆசிரியர்களை பாராட்டிவட்டாரக்கல்வி அலுவலர்வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அறிவியல் மாநில செயலாளர் எம் எஸ் ஸ்டீபன்நாதன் கலந்து கொண்டு பெற்றோர்கள் மற்றும் மாணவியருடன் கலகலப்புடன் நகைச்சுவையாக மாணவர்களை எப்பாதையில் நாம் கொண்டு செல்ல வேண்டும் என சிறப்புரை ஆற்றினார்.

மேலும் சமூக ஆர்வலர் புரவலர் ஷாஜகான், பெற்றோர் ஆசிரியர் சங்கத் துணைத் தலைவர் சந்தான ராமன், பல்நோக்கு சேவை இயக்க செயலாளர்செல்வராஜ், முன்னாள் மாணவர் சங்க தலைவர் பத்ம ஸ்ரீ ராமன், பெற்றோர் ஆசிரியர் சங்க பொருளாளர் ராஜேந்திரன், வணிகர்சங்கதுணைத் தலைவர் ஜெயக்குமார், முன்னாள் மாணவர் பாபு மனோகரன், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டசெயலாளர் சங்கரலிங்கம் மாவட்ட இணை செயலாளர் பிளாட்டோ, கராத்தே பயிற்றுனர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் , சான்றிதழ்கள் வழங்கி வாழ்த்தினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு விழாவும் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பான பணியை மேற்கொண்ட ஆசிரியர்களுக்கு பெற்றோர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

விழாவில் நிறைவாக பள்ளியின் ஆசிரியை சிங்கார கஸ்தூரிபாய் நன்றியுரை கூறினார்

# வேட்டவலத்தில் புனித வெள்ளியையொட்டி மலைக்கோயிலுக்கு சிலுவைப்பாதை பயணம்

## திரளான கிறிஸ்தவர்கள் பங்கேற்பு




வேட்டவலம்,ஏப்.04–

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட தினத்தை உலகெங்கும் புனித வெள்ளியாக கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கின்றனர்.அதன்படி வேட்டவலம் புனித மரியாவின் மாசற்ற இருதய ஆலயத்தில் இருந்து பங்குத்தந்தை ஆரோக்கிய சாமி,உதவி பங்குத்தந்தை சூசை ராஜ் தலைமையில் நேற்று காலை 7 மணிக்கு மலைக்கோயிலுக்கு சிலுவைப்பாதை பயணம் நடந்தது.இதில் கிறிஸ்தவர்கள் சிலுவையை தோளில் சுமந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று,14 இடங்களில் சிலுவையை வைத்து சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்கள்.

பின்னர் வேட்டவலம் மலையில் அமைந்துள்ள புனித சூசையப்பர் திருத்தலத்திற்குசிலுவைப்பாதை பயணம் வந்தடைந்தது. இதில் திரளான கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டனர்.

இதே போல் வேட்டவலம் மறை வட்டத்திற்கு உட்பட் ஆவூர்,ஜமீன்கூடலூர், நா.கெங்கப்பட்டு, சாணிப்பூண்டி, மதுராம்பட்டு ஆகிய பகுதிகளில் நடந்த சிலுவைப்பாதை பயணத்தில் திரளான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.



23.04.,2026 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டி,(03.04.2026) நேற்று செங்கல்பட்டு காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் செய்து வரும் வாகன சோதனை பணிகளை செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் கமல் ப்ரீத் சிங், அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்...



காஞ்சிபுரம் மாநகராட்சி ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில் உற்சவ திருவிழாவை முன்னிட்டு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் சங்கம் சார்பில் மாநில பொது செயலாளர் கே. சரஸ்வதி தலைமையில்சங்கஉறுப்பினர்கள்ணபாலாஜி,ஹேமலதா,ஜெயந்திஆகியோர்ஏற்பாட்டில், சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் சங்க மாநில தலைவர் கே என் மூர்த்தி, காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடக்கி வைத்தனர். இதில் மாநகராட்சி நகர பிரிவு அலுவலர் கணேசன், ரங்கன்,நகரப்பிரிவுதுணைஅலுவலர்ஸ்வேதமற்றும்தமிழ்நாடுவணிகர்சங்கபேரமைப்பின் உடைய மாவட்ட தலைவர் எ. வேலுமணி, ராஜவேலு, விவேகானந்தா அனைத்து உடல் உறுப்பு கட்டுமானம் நலச்சங்கம் வேளியூர் கருணாகரன், காஞ்சிபுரம் ஆன்லைன் சிட்டி மாவட்டத் தலைவர் லயன்.தணிகாசலம் மற்றும் சங்க நிர்வாகிகள் பாபு, சீனிவாசன், சிங்காரவேலன், சத்தியா, கவிதா, கலையரசி, உஷா, சிந்து, மோகன லட்சுமி, சாந்தி மற்றும் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர்.



கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (03.04.2026) அன்று கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு

# பல்வேறு துறைகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி!

## விழுப்புரம் கலெக்டர் தகவல்



விழுப்புரம், ஏப். 04–

விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேஷேக் அப்துல் ரஹ்மான், விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது, தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் 63 தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் 63 நிலை கண்காணிப்புக் குழுக்கள் என 126 குழுக்கள் அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுப்பட்டு வருகிறார்கள். மேலும் பல்வேறு துறைகளில் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுப்பட்டு வருகிறார்கள்.

இக்குழுக்கள் வாகன தணிக்கை, தேர்தல் முறைகேடுகளை கண்காணித்தல் மற்றும் புகார்கள் மீது நடவடிக்கை எடுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இக்கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் குழுக்கள் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 01.04.2026 அன்று வரையில் தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றால் ரூ. 66,77,963/ மதிப்பிலான ரொக்கப் பணம், மதுபானங்கள், போதைப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் காவல்துறையின்மூலம் ரூ. 15,70,484/ மதிப்பிலான ரொக்கப் பணம், மதுபானங்கள், போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 01.04.2026 அன்று வரை தேர்தல் பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றால் கைப்பற்றப்பட்ட இனங்களில் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் ரூ.42,70,620/ மதிப்பிலான ரொக்கப்பணம்மற்றும்இதரபொருட்கள் விடுவிக்கப்பட்டு உரிமைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில்

# நிலையான கூர்ந்தாய்வு குழுவினர் இரவில் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பணிகள் குறித்து கலெக்டர் முன்னிலையில் திடீர் ஆய்வு



திண்டுக்கல், ஏப். 04–

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் பறக்கும் படை (FST) மற்றும் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினர் (SST) இரவில் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் முன்னிலையில் நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பறக்கும் படையினர் குழு (FST) மற்றும் நிலையான கூர்ந்தாய்வுக் குழு (SST) நியமிக்கப்பட்டு வாகன சோதனை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், 130நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளபட்டிசோழவந்தான் சாலையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், வத்தலக்குண்டு பெரியகுளம் சாலையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், 129 –ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திண்டுக்கல் – தேனி சாலையில் அமைந்துள்ள சித்தையன்கோட்டை சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் (FST) மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன சோதனை பணியினையும், புதுசத்திரம்சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், வேடசந்தூர் ஒட்டன்சத்திரம் சாலையில் உள்ள நவாமரத்துப்பட்டி சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், அகரம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் (FST) மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன சோதனை பணியினையும், 128ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் அமைந்துள்ள சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் (FST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், தாராபுரம் முதல் ஒட்டன்சத்திரம் வரை உள்ள சாலையில் அமைந்துள்ள அப்பியம்பட்டி சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், 133வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, கல்வார்பட்டிக்குட்பட்ட கூம்பூர் காவல் நிலையம் அருகில் உள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் (SST) மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு வேலூர் மாவட்டத்தில் 100% வாக்குப்பதிவுவை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் போட்டியைமாவட்டதேர்தல்அலுவலர்/மாவட்டஆட்சித்தலைவர்வே.இரா.சுப்புலெட்சுமி, நேற்று வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், வேலூர்சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பழனி, தேர்தல் வட்டாட்சியர் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட துப்புரவு தொழிலாளர் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறிய அதிமுக வேட்பாளர்



பெரம்பலூர், ஏப். 04–

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்திற்கு உட்பட்ட தழுதாழை அருகே உள்ள தாழைநகர் கிராமத்தை சேர்ந்த கண்ணன் என்பவரின் மனைவி தனலட்சுமி.

இவர் அப்பகுதியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் தனலட்சுமியின் வீடு சேதமடைந்து விட்டது.

இச்சம்பவத்தை கேள்விப்பட்ட அதிமுக மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமான இளம்பை. இரா. தமிழ்ச்செல்வன் நேரில் சென்று பாதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் தனலட்சுமியின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

2026 இல் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன் உடனடியாக புதிய வீடு கட்டித் தரப்படும் என்று உறுதி அளித்து விட்டு சென்றார். இந்நிகழ்வில் வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாசம், மாவட்ட இணை செயலாளர் ராணி, அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டியன், மாவட்ட மீனவர் அணி செயலாளர் முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராமசாமி, மாவட்ட இலக்கிய அணி தலைவர் துரை உட்பட கட்சி நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக பணியாற்றி வந்த இளம்பகவத் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்ட விஷ்ணு மகாஜன் பொறுப்பேற்றுக் கொண்டார்.



மதுரை பாண்டி கோவில் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் மதுரை மாநகர் மாவட்ட ரஜினி ரசிகர் மன்ற துணை செயலாளரும் பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரருமான அழகர் இல்ல விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ரஜினி ரசிகர் மன்ற நிர்வாகிகள் பாலதம்புராஜ் ஓய்வு பெற்ற ஏடிஎஸ்பி குமரவேல் கோல்டன் சரவணன் நமச்சிவாயம் உட்பட ரஜினி ரசிகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து 23ஆம் தேதி நடைபெறக்கூடிய தமிழக சட்டமன்ற தேர்தலில் ரஜினி ரசிகர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய ஜனநாயக கடமையை ஆற்று மன்னர் மறவாமல் 100% நமது வாக்குகளை செலுத்துவோம் என மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மதுரை மாநகர் மாவட்ட ரஜினி மன்ற நிர்வாகிகள் மற்றும் ரசிகர்கள் ஒன்றிணைந்து மதுரை பாண்டி கோவில் பகுதியில் காவல் தெய்வமாக உள்ள பாண்டி முனீஸ்வரருக்கு சிறப்பு பூஜைகள் செய்த நிலையில் 100% வாக்களிப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

### திருவெண்ணெய்நல்லூர் அருகே

# இருவேல்பட்டு கிராமத்தில் வாக்கு சேகரித்த ஜி.ஆர்.வசந்தவேல்;

### இராஜீவ்காந்தி தலைமையில் உற்சாக வரவேற்பு



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்றதொகுதி திமுக வேட்பாளர் ஜி ஆர் வசந்தவேல் திருவெண்ணெய்நல்லூர் அருகே இருவேல்பட்டு கிராமத்தில் திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டி வாக்கு சேகரித்தார். அப்போது திமுக கிழக்கு ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் இராஜீவ்காந்தி தலைமையில் இனிப்பு வழங்கி உற்சாக வரவேற்பு தந்தார். அப்போது தமிழக துணை முதலமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் திருவுருவ படத்தை உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேலுக்கு நினைவு பரிசாக வழங்கினார். இதில் திமுக கிழக்கு ஒன்றிய செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான மா.சந்திரசேகரன், ஒன்றிய கவுன்சிலர் ஸ்ரீதர், ஒன்றிய இளைஞர்ணி அமைப்பாளர் ராஜா மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய கிளினிக் மருத்துவர்களின் சங்கம் திமுகவிற்கு ஆதரவு



இந்திய கிளினிக் மருத்துவர்களின் சங்கம் சார்பாக தமிழக முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளிக்கிறோம் அந்த வகையில் மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் அதே நேரத்தில் திராவிட முன்னேற்ற கழக அரசு அமைந்த உடன் எங்களுடைய கோரிக்கை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம். நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாத கோரிக்கையாக இருக்கும் பாரம்பரிய மருத்துவர்கள் அரசு பதிவு வழங்க வேண்டும் மருத்துவமனை பதிவு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் .பாரம்பரிய மருத்துவர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும் அதுபோன்று ஆயுஷ் துறை மருத்துவர்கள் தமிழகம் முழுவதும் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்பட வேண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரியும் மருத்துவர்களை நிரந்தரமாக பணியமர்த்தப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை இந்த திராவிட முன்னேற்ற கழக அரசு எங்களுக்கு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம் என்ன அவர்கள் குறிப்பிட்டனர்.

### திண்டுக்கல் மாவட்டத்தில்

# தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பணிகள் குறித்து கலெக்டர், எஸ்.பி. ஆய்வு



திண்டுக்கல், ஏப். 04–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் பறக்கும் படை (FST) மற்றும் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினர் (SST) இரவில் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுவரும் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பிரதீப், முன்னிலையில் நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளபட்டி சோழவந்தான் சாலையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், வத்தலக்குண்டு பெரியகுளம் சாலையில் அமைந்துள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், 129 –ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திண்டுக்கல் – தேனி சாலையில் அமைந்துள்ள சித்தையன்கோட்டை சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன சோதனை பணியினையும், புதுசத்திரம் சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், வேடசந்தூர் ஒட்டன்சத்திரம் சாலையில் உள்ள நவாமரத்துப்பட்டி சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும், அகரம் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வாகன சோதனை பணியினையும், 128ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் அமைந்துள்ள சோதனை சாவடியில் பறக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், தாராபுரம் முதல் ஒட்டன்சத்திரம் வரை உள்ள சாலையில் அமைந்துள்ள அப்பியம்பட்டி சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும், 133வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி, கல்வார்பட்டிக்குட்பட்ட கூம்பூர் காவல் நிலையம் அருகில் உள்ள சோதனை சாவடியில் நிலையான கூர்ந்தாய்வுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியினையும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஆகியோர் நேரில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா (03.04.2026) அன்று கீழ்குளம் முதல்நிலை பேரூராட்சி சார்பில் சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார்.

# வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து கலெக்டர் ஆய்வு



திருவண்ணாமலை, ஏப்.04–

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், (02.04.2026) அன்று திருவண்ணாமலை மாநகராட்சி பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வரும் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி இன்றைய தினம் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பதற்றமான வாக்குச்சாவடி மையங்களான கல்நகர் பகுதியில் உள்ள பாகம் எண்.132133இல் உள்ள சமுதாய கூடம் வாக்குச்சாவடி மையத்திலும், ஆடையூர் உள்ள பாகம் எண்.5.6.7இல் உள்ள ஆதிதிரவிடர் நல நடுநிலைப் பள்ளி வாக்குச்சாவடி மையத்திலும் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்தும், வாக்காளர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் கல்நகர் மற்றும் ஆடையூரில் பொதுமக்களிடம் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து அறிவுறுத்தும் வகையில் பொதுமக்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். முன்னதாக திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள புதிய பூ மற்றும் காய்கறி சந்தை வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாசகங்களை அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ம.சுதாகர்., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் மரு.ஆர்.மணி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, மாநகராட்சி ஆணையர் செல்வபாலாஜி, திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் வட்டம் மற்றும் திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் ஊத்துக்கோட்டை பிரதான சாலையில் அமைந்துள்ள வேளான் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் செயல்படும் ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிலை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முபிரதாப், தலைமையில் அனைவரும் வாக்களிக்க விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுகொண்டனர். கஉடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் .வை.ஜெயக்குமார். இணை இயக்குநர் வேளாண்மை க.செல்வராஜு. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை. க.வேதவல்லி, துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை .குமரவேல், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜவேல், வேளாண் வணிக துணை இயக்குநர் சசிரேகா வோண்மை துணை இயக்குநர் மாநில திட்டம், இயக்கம் ஸ்ரீ சங்கரி,வேளாண்மை உதவி இயக்குநர் பயிர் காப்பிடு! .ச.ரமேஷ். திரலான விவசாய சங்க பிரிதிநிதிகள், விவசாயிகள் மற்றும் துறை சர்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள்

### திருவண்ணாமலை கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



திருவண்ணாமலை, ஏப். 04–

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில் (03.04.2026) அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் சார்பில் வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் முன்னேற்பாடு பணிகளும், வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மாவட்ட நிர்வாகம் சார்பில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மேலும் கல்லூரி மாணவ, மாணவிகள், மகளிர் சுயஉதவி குழுக்கள் சேர்ந்தவர்கள். மாற்றுத்திறனாளிகள், நாடக கலைக்குழுக்கள் மூலம் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் பேரணி, மனித சங்கிலி போன்றவைகள் மூலம் தேர்தலில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையத்தின் சார்பில் மாவட்ட விளையாட்டு விடுதி பெண்களும், பீனிக்ஸ் ரோலர் போர்ஸ் அகாடமியை சேர்ந்தவர்களும் மற்றும் வீகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சேர்ந்தவர்கள் போன்ற பல்வேறு விளையாட்டு மாணவ, மாணவிகள் சிலம்பம், கராத்தே மற்றும் வில் வித்தை போன்ற விளையாட்டுகளை விளையாடி வாக்காளர்களுக்கு தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

மேலும் விளையாட்டு மாணவ, மாணவிகள் என் வாக்கு, என் உரிமை, உங்கள் வாக்கு உங்கள் எதிர்காலம், 100 சதவீதம் வாக்களிப்போம்.

நேர்மையாக வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) தனபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) கிருஷ்ணன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் .சண்முகாப்பிரியா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தாலுகா இனையம் ஊரில் புனித லேனம்மாள் ஆலயத்தில் புனித வெள்ளி பூசையுடன் கூடி சிலுவை பாதை சிறப்பாக நடைபெற்றது. ஆலயத்தில் ஆயிரக்கணக்கான ஊர்மக்கள் கலந்து கொண்டு இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணங்களையும் குறித்து தியானித்தனர்.



கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (02.04.2026) மாத்தூர் தொட்டிப்பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் விழிப்புணர்வு பதாகைகளை நேரில் பார்வையிட்டார். உடன் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ உட்பட பலர் உள்ளார்கள்.

# இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தென் மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவராக வி.சி. அசோகன் பொறுப்பேற்றார்



இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தென் மண்டல (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவராக வி.சி. அசோகன், 2026 ஏப்ரல் 01 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள இந்தியன் ஆயில் நிறுவன எண்ணெய் தொழில்துறைக்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுவார்.

எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான சிறந்த, பன்முக அனுபவமுள்ளவர் அசோகன். அவர் பெட்ரோலியத் துறை செயல்பாடுகள், பெடரோலிய தொழில்துறையில் வர்த்தக நுணுக்கங்கள், சில்லறை விற்பனை உள்ளிட்ட பல துறைகளில் ஆழ்ந்த நிபுணத்துவம் கொண்டவர். எரிசக்தி வணிகம் குறித்த வலுவான உத்தியும் செயல்பாட்டுத் திறனும் கொண்டவர்.

அசோகன், திருச்சிரா ப் பள்ளியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் (REC) வணிக மேலாண்மையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், நாடு முழுவதும் பல பிரிவுகளில் தலைமைப் பதவிகளில் தொடர்ந்து சிறந்து விளங்கி வருகிறார்.

கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் பல்வேறு பிரிவுகள், மாநில அளவிலான செயல்பாடுகளுக்குத் தலைமை வகித்துள்ளார். முக்கியப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு, அகில இந்திய அளவில் விரிவான சந்தைப்படுத்தல் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இந்த பதவிக்கு முன்பு, அசோகன் மும்பையில் உள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் தலைமை அலுவலகத்தில் அகில இந்திய சில்லறைவிற்பனைப்பிரிவின் தலைவராகப் பணியாற்றினார். அங்கு, பல முன்னோடியான சில்லறை விற்பனை உத்திகளை செயல்படுத்துவதில்அவர் முக்கியப் பங்காற்றினார்.

மேலும், இலங்கையில் உள்ள இந்தியன் ஆயிலின் துணை நிறுவனமான லங்கா ஐஓசி பிஎல்சில் விற்பனைப் பிரிவுத் துணைத் தலைவராகப் பணியாற்றியதன் மூலம், சர்வதேச அனுபவத்தையும் அவர் கொண்டுள்ளார். அங்கு, எரிபொருள் சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதிலும், சந்தையில் ஐஓசி பிஎல்சியை வலுப்படுத்துவதிலும் அவர் முக்கியப் பங்காற்றினார்.

தமது நிர்வாகப் பொறுப்புகளுடன், அசோகன் சிங்கப்பூரில் உள்ள சன்மொபிலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவிலும் பணியாற்றி, நிலையான போக்குவரத்துத் தீர்வுகளை ஏற்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பையும்வழங்கிவருகிறார்.

# தொழில் மற்றும் வணிக டீசல் விலை லிட்டருக்கு ரூ.17.19 குறைந்தது

சென்னை:
தொழில் மற்றும் வணிக ரீதியான டீசல் விலை லிட்டருக்கு ரூ.17.19 குறைந்துள்ளது.

அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே நடைபெறும் போர் காரணமாக ஈரான் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஹார்மூஸ் நீரிணையை முடக்கியது. இதனால் உலக அளவில் எண்ணெய்க் கப்பல்களின் போக்குவரத்து தடைபட்டுள்ளது. மேற்கு ஆசிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வர வேண்டிய கச்சா எண்ணெய், எல்பிஜி ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன.இதன்காரணமாகநாடுமுழுவதும் காஸ் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மேலும் கச்சா எண்ணெய் விலை உயர்வால் தொழில் மற்றும் வணிக ரீதியான டீசலின் விலை கடந்த மாதம் 20ம் தேதி லிட்டருக்கு ரூ.22 அதிகரிக்கப்பட்டது. இதனிடையே கடந்த சில நாட்களுக்கு பெட்ரோல், டீசல்மீதானகலால்வரிகுறைக்கப்பட்டது.இந்நிலையில் தொழில் மற்றும் வணிகரீதியான டீசல் விலையை பொதுத்துறைஎண்ணெய்நிறுவனங்கள்குறைத்துள்ளன. இதுகுறித்து பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்க தலைவர் கே.பி.முரளி வெளியிட்ட அறிக்கை: தொழில் மற்றும் வணிகப் பயன்பாட்டுக்கான டீசல் விலையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய விலை குறைப்பை நாங்கள் வரவேற்கிறோம். சர்வதேச அரசியல் சூழலால் கடந்த மார்ச் மாதம் ஒரு லிட்டர் ரூ.109.59 என்ற உச்சத்தை எட்டிய இந்த மொத்த விற்பனை டீசல் விலை, தற்போது ஏப்ரல் மாதம் ரூ.92.40 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு லிட்டருக்கு ரூ.17.19 வரை விலை குறைந்துள்ளது.சென்னையில் தற்போதைய சில்லறை விற்பனை விலை லிட்டருக்கு ரூ.92.48 ஆகவும், தொழில், வணிக டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.40 ஆகவும் உள்ளது. இந்த விரைவான நடவடிக்கை சில்லறை விலை நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி, தமிழகத்தில் உள்ள பெட்ரோலிய விற்பனையாளர்களுக்கு ஆதரவாக உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தேர்தல் பொதுப் பார்வையாளர் மிங்மா டி.ஷெர்பா ஆய்வு



திருமங்கலம்:
மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேர்தல் பொதுப் பார்வையாளர் மிங்மா டி. ஷெர்பா, 195திருப்பரங்குன்றம் மற்றும் 196திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் அலுவலகத்திற்கு சென்று வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் நடைமுறைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் நடைமுறைகள் இந்திய தேர்தல் ஆணையம் வகுத்துள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி சரியாக பின்பற்றப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்தார். மேலும், வேட்புமனு தாக்கல் செய்ய வருகை தரும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து, சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் அனைவரும் விதிமுறைகளை கடைப்பிடித்து தங்கள் கடமைகளை பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், தேர்தல் செயல்முறைகள் அனைத்தும் சீராகவும், தடையின்றியும் நடைபெற அதிகாரிகள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் பொதுப் பார்வையாளர் மிங்மா டி. ஷெர்பா தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரியில் வாக்காளர் விழிப்புணர்வு முகாம்;

# தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் சந்திப்பு




புதுச்சேரி, ஏப்.04
புதுச்சேரி, சேதராப்பட்டு தொழிற்பேட்டையில் உள்ள ஒரு தனியார் கம்பெனியில், எதிர்வரும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, தொழிலாளர்களை சந்தித்து மாவட்ட தேர்தல் அதிகாரியின் வேண்டுகோள் கடிதங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில், பேசிய மாவட்ட தேர்தல் அதிகாரி அ. குலோத்துங்கன், தொழி லாளர்கள் வாக்குப் பதிவு செய்வதற்காக அரசு சிறப்பு விடுமுறை அளித்துள்ளதையும், அதனை பயன்படுத்தி அவர்கள் குடும்பத்துடன் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், வேட்பாளர்களின் பின்னணி பற்றி தெரிந்து கொள்ள kyc செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம் எனவும், தேர்தல் நன்னடத்தை விதி மீறல்கள் பற்றி புகார் அளித்திட cVIGIL செயலியில் புகார் அளித்திடலாம் என்று கூறினார். வாக்காளர்களின் ஒவ்வொரு வாக்கும் அவர்களது எதிர்காலத்தினை நிர்ணயிக்கின்றது எனவும், நாம் மட்டும் வாக்களித்தால் போதாது எனவும், மற்றவர்களையும் வாக்களித்திட ஊக்குவித்தல் வேண்டும் என்று கூறினார்.

மேலும், கடந்த 2021ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் எண்பத்து இரண்டு சதவிகிதமாக வாக்குப்பதிவு சதவிகிதம் அதனை அடுத்து 2024 ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் எழுபத்து ஒன்பது சதவிகிதமாக சற்று குறைந்துஎனவும், ஆனால் இம்முறை அனைவரும் தவறாமல் வாக்களித்து நூறு சதவிகித வாக்குப்பதிவினை அடைந்து, புதுச்சேரி ஒரு மாதிரி மாவட்டமாக உருவாக்கிட அனைவரும் அவர்களது பங்கினை ஆற்றிட வேண்டும் என்றும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து நூறு சதவிகிதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி வேண்டுகோள் கடிதங்களை, தொழிலாளர்களுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரி அ. குலோத்துங்கன் வழங்கினார். முன்னதாக மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் தேர்தல் கீதம் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய காணொளி திரையிடப்பட்டது. விழாவில், சுமார் அறுநூறு தொழிலாளர்கள் கலந்து கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு செய்திகள் அடங்கிய பதாகைகள் ஏந்திய வண்ணம் அவசியம் வாக்களிப்போம் என்று உறுதி அளித்தனர். நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

# நெற்பயிரில் பறவைக்குடில் குச்சி முலம் பூச்சி மேலாண்மை



பயிரில் பூச்சி மேலாண்மையில், பறவைக் குடில் குச்சியின் பங்கு குறித்து வேளாண் பட்டதாரி சேர்மராஜா விளக்கம் அளித்துள்ளார். நெற்பயிர்கள் பூக்கும் பருவத்திலும், கதிர் முற்றும் பருவத்திலும் ஆங்காங்கே இலை மடக்கு புழு, தண்டு துளைப்பான், புகையான் மற்றும் ஆனைக் கொம்பன் தாக்கங்கள் அதிகம் காணப்படுகின்றன. பொதுவாக, பூச்சி தாக்கங்கள்நெற்பயிரில்அனைத்து பருவத்திலும் தாக்கி சேதாரத்தை விளைவிக்கக் கூடியது. அதை தடுப்பதற்கு உண்டான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடித்தாலே இப்பூச்சித் தாக்கத்திலிருந்து பயிரை பாதுகாக்கலாம். பூச்சிகள் மற்றும் புழுக்களை உண்ணுகின்ற பறவைகள் உட்காருவதற்கான இடங்களை வயலில் அமைப்பதனால் அந்த பறவைகள் பூச்சிகள் மற்றும் புழுக்களை பிடித்து உண்கின்றன. இதை அமைப்பதற்கு மூங்கில் குச்சி, மரக் குச்சி அல்லது மரக்கிளைகளை மூன்றடி முதல் ஏழடி உயரத்தில் 'டி' வடிவத்தில் நெல் வயலில் ஆங்காங்கே நட்டு வைத்தால் போதுமானது. நெற்பயிரானது நடவு நட்டதிலிருந்து தூற்கட்டும் பருவத்தில் இவ்வாறு பறவைக் குடில்கள் அமைக்கலாம் அல்லது எளிதில் கிடைக்கக்கூடிய தென்னை மட்டையின் அடிப்பகுதியை வெட்டி மூன்றடி முதல் ஏழடி உயரத்திற்கு தயார் செய்து ஊன்றி விட்டால், பகல் பொழுதில் காக்கை, மைனா மற்றும் குருவிகளும் இரவு நேரத்தில் ஆந்தை மற்றும் கோட்டான்கள் நெற்பயிரை தாக்கும் பூச்சிகள் மற்றும் புழுக்களைபிடித்துஉண்டுவிடும். ஹெக்டேருக்கு 50 எண்கள் வரை இந்த பறவைகள் அமரும் இடங்களை அமைக்கலாம். நெற்பயிரின் உயரத்தை விட 75 சென்டிமீட்டர் உயரமாக இவ்விடங்களை அமைத்தால் பறவைகளின் பார்வையில் பூச்சிகள் மற்றும் புழுக்கள் தென்படும். இவ்வாறு நெற்பயிரை தாக்கும் பூச்சிகள் மற்றும் புழுக்கள் மட்டுமின்றி எலிகளையும் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.



கோவை மாவட்டம் பொள்ளாச்சி உடுமலை ரோடு ஊஞ்சவேலாம்பட்டி தேசிய நெடுஞ்சாலை தாராபுரம் ரோட்டில் தேர்தல் நெருங்குவதால் காவல் துறையினர், பறக்கும் படையினர் இணைந்து வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772026,9443699066